<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

MCOP No: 32/2020

2025-ம் ஆண்டு ஜீன் மாதம் 13 நாள் Pw1 சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 13.06.2025

Pw1 (கலைச் செல்வி)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 ம் மனுதாரர் ஈஸ்வரி என் தாயார் என்றால் ஆமாம். அவர் திடகாத்திரமாகவும் நல்ல மனநிலையிலும் உள்ளார் என்றால் ஆமாம். என் அம்மா சாட்சியம் அளிக்க வராததற்கு என்ன காரணம் என்றால் நானே சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னதால் நான் வந்தேன். என் அம்மா எங்கு வேலைக்கு செல்கிறார் என்றால் 100 நாள் வேலைக்கு செல்கிறார். நான் பிஏ எக்கனாமிக்ஸ் படித்துள்ளேன் என்றால் ஆமாம். என் அப்பா இறந்த பின் தான் எனக்கு திருமணம் ஆனது என்றால் ஆமாம். என் தம்பி படித்து முடித்துவிட்டார் என்றால் ஆமாம், டிப்ளமோ ஈசிஈ படித்துள்ளார். என் தம்பி எங்கு வேலைக்கு செல்கிறார் என்றால் சிப்காட்டில் எக்சிம் நிட் வேரில் வேலை செய்கிறார். என் தம்பிக்கு என்ன சம்பளம் என்றால் மாதம் ரூபாய் 12 ஆயிரம் சம்பளம் ஆகும். என் அம்மா 100 நாள் வேலைக்கு சென்று மாதம் ரூ.7000 சம்பாதிக்கிறார் என்றால் ஆமாம். நான் என் கணவர் வீட்டில் தான் குடியிருக்கிறேன் என்றால் ஆமாம். என் அப்பா இறந்த பின் என் அம்மாவும் என்

தம்பியும் சேர் த்து தான் எனக்கு திருமணம் செய்து வைத்தனர் என்றால் ஆமாம். என் அப்பாவின் இறப்பினால் எனக்கோ, என் அம்மாவிற்கோ, என் தம்பிக்கோ எந்த வருமான இழப்பும் இல்லை என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்று சொல்லிவிட்டு பின்னர் வருமான இழப்பு தான் என்று சொன்னார்.

நான் இந்த வழக்கில் எனது தரப்பில் குறியீடு செய்துள்ள மசாஆ 1 முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிகள் எல்லாம் உண்மையானது தான் என்றால் ஆமாம். மேற்படி முதல் தகவல் அறிக்கை என் அப்பா இறந்த பின் கிராம நிர்வாக அலுவலர் அளித்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி முதல் தகவல் அறிக்கையில் என் அப்பாவின் வயது 65 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம், ஆனால் அவருக்கு அப்போது 49 வயது தான். போலிஸ் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் அவரின் பெயர் கண்டுபிடிக்கும் வரை அவரை முதியவர் என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் ஆமாம்.என் அப்பா இறந்து 5 நாட்கள் கழித்து தான் அந்த விவரம் தெரிந்து என் அப்பாவின் உடலை நாங்கள் அடையாளம் கண்டோம் என்றால் ஆமாம். என் அப்பாவின் அடையாளம் நாங்கள் காண்பிக்கும் வரையில் காவல் துறை ஆவணங்களில் அடையாளம் தெரியாத முதியவர் என்று தான் அவரை பற்றி தெரிவிக்கப்ட்டது என்றால் ஆமாம். நாங்கள் அடையாளம் காண்பித்த பின் தான் போஸ்ட்மாட்டம் செய்யப்பட்டது என்றால் ஆமாம்.

எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள என் அப்பாவின் இறப்பு சான்றிதழ் என் அப்பாவின் வயதை காண்பிக்கக்கூடிய ஆதார் கார்டு போன்ற

ஆவணங்கள் காண்பித்து பின்னர் அவரின் வயது உறுதி செய்யப்பட்டு 49 என வயது குறிப்பிட்டு மசாஆ 7 இறப்பு சான்று பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என் அப்பாவிற்கு அவர் இறக்கும்போது வயது 65 என்றும், ஆனால் வழக்கிற்காக அவருக்கு வயது 49 என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

விபத்திற்கு முன்பு என் அப்பா எந்த தேதி வீட்டிலிருந்து சென்றார் என்றால் 30.06.2019 ம் தேதி போனார். 5 நாட்கள் அவரை காணவில்லை என்ற போது காவல் நிலையத்தில புகார் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை, சொந்தத்தில் எல்லாம் விவாரித்தோம். இறந்தபோனவர் என் அப்பா முனியன் தான் என்பதை காண்பிக்க காவல் துறை ஆவணங்கள் தவிர்த்து வேறு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எதிர்மனுதாரர் கந்தசாமி மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற வழக்கு சிசி எண் 33/2020 விசாரணைக்கு பின் அவர் குற்றவாளி அல்ல என்று விடுதலை செய்யப்பட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மசாஆ 1 முதல் 6 ஆவணங்கள் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஊத்துக்குளி ல் இருந்து நகல் எடுத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மசாஆ 2 மாதிரி வரைபடம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். முதல் தகவல் அறிக்கை , எனது பிரமாண பத்திரிக்கை, மனு ஆகியவற்றில் என் அப்பா கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி

சென்றதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். விபத்து நடந்த சாலை தென்வடலாக உள்ளது என்றால் ஆமாம். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி என குறிப்பிடப்பட்டுள்ள சாலை குறுக்கே கடக்கும் திசை என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் பஸ்ஸ்டாப் உள்ளது என்றால் ஆமாம். சம்பவ இடம் போக்குவரத்து நிறைந்த சாலை என்றால் ஆமாம். என் அப்பா மனநிலை சற்று பாதிக்கப்பட்டவர் என்றால் சரியல்ல. அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததால் தான் இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு விபத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் ஆமாம். நான் பிரமாண பத்திரிக்கை பத்தி 3 ல் எதிர்மனுதாரர் சாலை விதிகளை பின்பற்றாமல் வேகமாக வாகனத்தை ஓட்டி வந்தார் என்று கூறியுள்ள சங்கதிகள் நானாகவே குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம்.

முதல் தகவல் அறிக்கையில் விபத்து நடந்த விதம் சொல்லப்பட்டுள்ளதும், எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண பத்திரிக்கையில் விபத்து நடந்த விதம் சொல்லப்பட்டுள்ளதிலும் மாறுபாடு உள்ளது என்றால் சரி. எங்கள் மனுவில் காலம் 12a ல் சிகிச்சை எடுத்துக் கொண்ட காலம் 30.07.2019 முதல் 01.07.2019 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

இந்த மனுவில் நான் புகார் கொடுத்த கிராம நிர்வாக அலுவலரை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் ஆமாம். காவல் நிலைய வழக்கில் நான் சாட்சியம் எதுவும் நீதிமன்றதில் அளிக்கவில்லை என்றால் ஆமாம்.

என் அப்பா பெருந்துறை சிப்காட்டில் உள்ள ெஉறல்பர் பாலிமர் கெமிக்கல் நிறுவனத்தில் கார்டனராக வேலை செய்து நாள்தோறும் செலவு போக ரூ.800 சம்பாத்தியம் செய்து வந்தார் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

என் அப்பாவிற்கு சம்பள சான்று எதுவும் வழங்கப்பட்டுள்ளதாஎன்றால் ரசீதில் கையெழுத்து செய்து பணம் பெற்றுக் கொள்வார். என் அப்பா மேற்படி நிறுவனத்தில் எவ்வளவு காலமாக வேலை செய்தார் என்றால் ஓராண்டாக வேலை செய்தார். என் அப்பாவிற்கு ஈஎஸ்ஐ, பிஎப் உள்ளதா என்றால் இல்லை. அந்த கம்பெனியின் மேலாளரா விவாரித்தால் என் அப்பா அங்கு வேலை செய்தாரா என்று தெரிய வரும் என்றால் ஆமாம். அவரை சாட்சியாக விசாரிக்க முடியுமா என்றால் தேவைப்பட்டால் விசாரிக்கிறேன்.

நான், என் அம்மா மற்றும் தம்பி ஆகியோர்கள் என் அப்பாவின் வருமானத்தை நம்பி இருந்தோம் என்று சொன்னது பொய் என்றால் சரியல்ல. என் தம்பி தற்போது தான் வேலைக்கு செல்கிறார், அப்பா இறந்த சமயம் படித்துக் கொண்டிருந்தார். அடிபட்ட நபர் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல.

எனவே நாங்கள் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கோர முடியாது என்றால சரியல்ல. ஆகையால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 13.6.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS